நவீன படப்பிடிப்புக்கு
சுப்பஸோ
வீடியோ
(ரவி ஒளி கானம்)
சிறி அமலா ஜுவலஸ் அருகில்
கண்டி வீதி,
சாவகச்சேரி.

பக்கங்கள்; நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
6:00

புதிய கலைநயத்தை
அறிமுகப் படுத்துபவர்கள்
சுப்பஸோ
வீடியோ
இல. 407,
சில்வா றோட்,
வட்டக்கச்சி.

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 மாசி 6 ஞாயிற்றுக்கிழமை (18-02-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 84

சகல கடற்படைத் தளங்களையும் உஷார்படுத்துகிறது ஸ்ரீலங்கா அரசு

அவசரமாக ஆட்திரட்டவும் ஏற்பாடு

கொழும்பு, பெப்ரவரி. 18

வெடிகுண்டுக் கப்பல்களுடன் திருகோணமலை துறைமுகத்துக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்த புலிகள் முயற்சித்திருப்பதை அடுத்து நாட்டில் உள்ள சகல கடற்படைத் தளங்களையும் ஸ்ரீலங்கா அரசு பூரண உஷார் நிலையில் வைத்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

கடற் புலிகளின் சவால்களைச் சமாளிக்கும் விதத்தில் - கடற்படையின் ஆள்பலத்தைத் திரட்டும் வகையில் — அவசர அவசரமாக கடற்படைக்கு புதிய துருப்புக்களைச் சேர்த்துக் கொள்ளவும் ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

திருகோணமலை துறைமுகத்துக்குள் தாக்குதல் நடத்தச் சென்ற கடற்புலியின் வெடிமருந்து ஏற்றிய கப்பல் இந்திய - ஸ்ரீலங்கா கடற்படைகளின் தாக்குதலினால் வெடித்த சம்பவத்தை அடுத்தே சகல ஸ்ரீலங்கா கடற்படைத் தளங்களும் பூரண உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக "பு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்புலிகள் இருவரின் திருவுருவப்பட ஊர்தி

சாவகச்சேரி, பெப். 18

திருகோணமலை துறைமுகத்திற்குள் தாக்குதல் நடத்துவதற்காகச் சென்ற சமயம் இந்திய — இலங்கை கடற்படை கப்பல்களுடனான கடும் சமரில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கடற்கரும்புலி லெப்டினன்ட் கேணல் மதன் (சோலை நம்பி), கடற்புலிகளின் வேவுப் புலி மேஜர் இலங்கேஸ்வரன் ஆகிய மாவீரர்களின் திருவுருவப்படங்கள் இன்று பிற்பகல் 2.30மணிக்கு வல்வெட்டித்துறை மற்றும் பருத்தித்துறையில் உள்ள அவர்களது இல்லங்களில் இருந்து அலங்கார ஊர்தியில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படும்.

பாண்ட்இசையுடன் பருத்தித்துறை கடற்கரை வீதி ஊடாக உருவப்படங்கள் கிரமக்கோட்டு சந்தியை சென்றடைந்து, அங்கு பொதுப் பந்தலில் மக்களின் இறுதிஅஞ்சலிக்காக அவை வைக்கப்படும்.

அஞ்சலிக் கூட்டத்தை யடுத்து நெல்லியடி வதிரி வீதியூடாக வடமராட்சி மாவீரர் துயிலுமில்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு இராணுவ மரியாதைகளுடன் நினைவு நடுகல் நாட்டப்படும். (உ-3)

பாதுகாப்பு வலயமாக கொழும்பு துறைமுகம்

அனுமதி இன்றி வந்தால் சூடு

கொழும்பு, பெப். 18

கொழும்புத் துறைமுகமும், அதனைச் சுற்றியுள்ள கடல் பிரதேசமும் பாதுகாப்பு வலயமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

இந்த வலயம் 4 மைல் பிரதேசத்தை கொண்டதாக இருக்கும்.

அனுமதி பெற்ற கப்பல்களும், வாகனங்களும் மாத்திரமே இந்த பாதுகாப்பு வலயத்துக்குள் வர முடியும்.

கொழும்புத் துறைமுகம் மற்றும் கப்பல்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இந்தப் பாதுகாப்பு வலயம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

துறைமுக அதிகார சபை, கடற்படையினரின் உதவியுடன் இதனை அமுல்படுத்தும்.

அனுமதியில்லாமல் பாதுகாப்பு வலயத்துக்குள் பிரவேசிக்கும் வள்ளங்கள், இழுவைப் படகுகள் மற்றும் பொதுமக்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது

அனுமதியில்லாமல் பாதுகாப்புவலயத்துக்குள் பிரவேசிக்கும் எவரையும் சுடுவதற்கு கடற்படையினருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (இ-3)

வண்ணார்பண்ணையில் புலிகள் தாக்குதல்!

யாழ்ப்பாண நகரில் இருக்கும் வண்ணார்பண்ணைப் பகுதியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு இத்தாக்குதல் இடம்பெற்றது. இதில் ஏற்பட்ட சேத விவரங்கள் இதுவரை தெரியவரவில்லை. (உ-3)

நிலக்கண்ணியால் தடம் புரண்ட

மூன்று ரயில் பெட்டிகள் இன்னும் மீட்கப்படவில்லை

வந்தாறுமூலையில் பதற்றம்

சாவகச்சேரி, பெப். 18

கடந்த ஞாயிற்றுக்கிழமை வந்தாறுமூலையில் கண்ணிவெடியில் சிக்கி தடம் புரண்ட மட்டக்களப்பு — கொழும்பு ரயிலின் மூன்று பெட்டிகள் இன்னும் மீட்கப்படாத நிலையில் அந்த இடத்திலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப்பெட்டிகளுக்கு 24 மணி நேரமும் இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதனால் வந்தாறுமூலையில் ஞாயிறு முதல் பதற்ற நிலை நிலவுகிறது. மக்கள் நடமாட்டமும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (உ-3)

குமரபுரம் படுகொலைகள்:

ராணுவ நீதிமன்றின் மேல் எமக்கு நம்பிக்கை இல்லை

தங்கத்துரை எம். பி. கடிதம்

கொழும்பு, பெப். 18

கிளிவெட்டி குமரபுரம் படுகொலை தொடர்பாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றத்தின் மீது இச்சம்பவத்தில் உயிர் தப்பியுள்ள மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்று திருகோணமலை மாவட்ட எம். பி. யான அ. தங்கத்துரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையில் நியமிக்கப்படும் நீதி விசாரணை மன்றமே இப்படுகொலை சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்கு ஏற்றது; இராணுவ விசாரணை மன்றம் ஏற்றதல்ல என்றும் அவர் ஆட்சேபித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

முகத்தை மூடிக் கட்டியபின் படையினர் வெறியாட்டம்

படுகாயமுற்றவர் சாட்சியம்

சாவகச்சேரி, பெப். 18

குமரபுரம் கிராமத்தில் அப்பாவித் தமிழ் மக்களை படுகொலை செய்து வெறியாட்டம் நடத்திய இராணுவத்தினர் அனைவரும் அவ்வேளை தங்களது முகங்களைக் கறுப்புத்துணியால் மூடிக் கட்டியிருந்தனர் என சம்பவத்தில் படுகாயமடைந்த ஒருவர் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

தம்மை அடையாளம் காட்டாமல் மறைக்கும் நோக்கில் கறுப்புத்துணியை அவர்கள் கட்டியிருந்த போதும் அவர்கள் கிளிவெட்டி முகாமைச் சேர்ந்தவர்கள் என்பதை தான் அறிவதாக காயமடைந்த காளிமுத்து என்பவர் தெரிவித்துள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

தாண்டிக்குளம் ஊடாக போக்குவரத்து ஆரம்பம்

வவுனியா காமினி மகா வித்தி[illegible]த்தில் தடுத்து [illegible] வைக்கப்பட்டிருந்த [illegible] பயணி[illegible] விடுவிக்[illegible] தாண்டி[illegible] அவர்கள் [illegible] காமினி ம[illegible] இல் வைத்து [illegible] விசா[illegible]

பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

[illegible] நேரம் வெள்ளியன்று [illegible]இல் இருந்து 150 பயணி[illegible] வவுனியா செல்ல [illegible] [illegible] [illegible] [illegible] அனுப்பப்பட்டதாகத் தெரிகிறது.

தீர்வுத் திட்டம் குறித்து

ரணில் - சந்திரிகா அடுத்த வாரம் பேச்சு!

கொழும்பு, பெப். 18

இனப்பிரச்சினைக்கு அரசு முன்வைத்துள்ள தீர்வுத் திட்டம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவும் அடுத்த வாரத்தில் பெரும்பாலும் சந்தித்துப் பேசுவர்.

ஜனாதிபதி செயலகம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பணிமனை வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டிருக்கின்றன

இதற்கிடையில்—

அரசாங்கம் வெளியிட்டுள்ள அதிகாரப் பரவலாக்கல் ஆலோசனை குறித்து ஐ.தே.க. நாடாளுமன்றக் குழுவும், செயற்குழுவும் எதிர்வரும் வியாழக்கிழமை ஆராயவிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாடாளுமன்றக் கட்டடத்தில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது. (உ-3)

பாடசாலைகளை மூடும் நிலையால் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு பலத்த அடி

சுமுக நிலையைக் காட்டும் முயற்சி தோல்வி

கொழும்பு, பெப். 18

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், உல்லாசப் பயணிகளுக்கு நம்பிக்கையூட்டுவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் முயன்று வரும் இவ்வேளையில் —

நாட்டில் உள்ள பாடசாலைகளைக் காலவரையின்றி மூடி இருப்பது —

பெரும் பாதகமான நிலையைத் தோற்றுவித்துள்ளது. இது அரசின் முயற்சிக்குப் பலத்த அடியாகும்.

இவ்வாறு இலங்கை நிலைமை குறித்த தனது ஆய்வு விமர்சனத்தில் ஏ. எவ். பி. தெரிவித்திருக்கிறது

மத்திய வங்கியில் இடம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

மகஸின் சிறையில் மலையக இளைஞர் சாகும்வரை உண்ணாவிரதப் போர்!

சாவகச்சேரி, பெப். 18

விசாரணைகள் இன்றி இரண்டு வருடங்களுக்கு மேலாக தடுத்துவைக்கப்பட்டுள்ள மலையக வாலிபர் முத்துச்சாமி பெனடிக் என்பவர் கொழும்பு மகஸின் சிறைச்சாலையில் கடந்த இரண்டு வாரங்களாக சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருவதாக அறிவிக்கப்படுகின்றது.

இவரது உடல்நிலை நாளுக்குநாள் மோசமடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமது விடுதலை தொடர்பாக இவர் எடுத்த முயற்சிகள் பயன் அளிக்காததையடுத்தே இவர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாகவும்—

தடுப்புக் காவல் கைதிகள் தொடர்பாக மனித உரிமைகள் விசாரணைக் குழுக்களோ, செஞ்சிலுவைச் சங்கத்தினரோ இதுவரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ. 3)

ஸ்ரீலங்கா கடற்படையினால் 24 தமிழக மீனவர்கள் கைது

[illegible] 18 [illegible] கடந்த [illegible]க்கிழமை ஆறு இயந்திரப் படகுகளில் தொழிலுக்குச் சென்ற [illegible] [illegible] 24 தமிழக மீன[illegible]

[illegible]டையினரே [illegible] இருப்பதாக [illegible] [illegible] [illegible] [illegible]

ஜெயக்குமார் சட்டப்பேரவையில் நேற்றுத் தெரிவித்தார். இது சம்பந்தமாக [illegible] உள்ள இந்தியத் தூதரகத்துடன் தமிழக அரசு தொடர்பு கொண்டுள்ளதா[illegible]

தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் —

அவர்களை விரைவில் மீட்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் —

அமைச்சர் மேலும் தெரிவித்

மலையக மக்கள் முன்னணி ஐ.தே.கவினருடன் பேச்சு!

கொழும்பு, பெப். 18

சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பாக அரசாங்கம் முன்வைக்கும் தீர்வுத் திட்டங்களுக்கு ஐ. தே. க. தனது முழு ஆதரவையும் வழங்கவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி கேட்டுள்ளது.

இக்கட்சியின் தலைவரும், தோட்ட வீடமைப்பு பிரதி அமைச்சருமான எஸ். சந்திரசேகரன் தலைமையிலான குழு ஐ. தே கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பு உப குழுவை வெள்ளியன்று சந்தித்தபோது இந்த வேண்டுகோளை விடுத்தது.

எதிர்க்கட்சித் தலைவரின் பணிமனையில் நடந்த இந்தச் சந்திப்பில் மலையக மக்கள் பிரச்சினை குறித்தும், இனப் பிரச்சினை தொடர்பாகவும் ஆராயப்பட்டது. (உ-3)

எழுதுவினைஞர் பதவிக்கு மேலும் 50 பேர் அழைப்பு

சாவகச்சேரி, பெப். 18

எழுதுவினைஞர் மற்றும் அதனோடிணைந்த சேவைகளுக்கு ஆள்சேர்ப்பதற்காக கடந்த ஆண்டு நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தோரில் இரண்டாவது தொகுதியினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இப்பரீட்சையில் 135புள்ளிகளுக்குமேல் பெறுபேறு பெற்ற இருபத்தைந்து பேர் ஏற்கனவே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களைத் தொடர்ந்து அடுத்த இடங்களில் உள்ள 50 பேரே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட உள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகத் தேர்வு அடுத்த வாரம் அளவில் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் உள்ள யாழ். செயலகத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-7)

திருமலையில் சுற்றிவளைப்பு

சாவகச்சேரி, பெப். 18

கடந்த 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை திருகோணமலையில் மூன்று தமிழ்க் கிராமங்களை படையினர் அடிக்கடி சுற்றிவளைத்து அப்பகுதி தமிழ் மக்களை துன்புறுத்தியுள்ளனர்.

ஆலங்கேணி, உப்பாறு, ஈச்சந்தீவு ஆகிய கிராம மக்களே இவ்வாறு சுற்றிவளைப்பு துன்புறுத்தலுக்கு இலக்கானார்கள் என்று அறிவிக்கப்பட்டது. (உ-3)

வெட்டுப்புள்ளி விவரம்

கொழும்பு, பெப். 18

எழுதுவினைஞர்கள் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைகளில் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதி பெறுவதற்கான வெட்டுப்புள்ளி விவரங்களை அரசு வெளியிட்டுள்ளது —

இதன்படி.

யாழ்ப்பாணம் 127, மன்னார் — 109, முல்லைத்தீவு — 118, வவுனியா — 115, திருகோணமலை — 116, மட்டக்களப்பு — 120, அம்பாறை — 118, கிளிநொச்சி — 120 ஆகும். (உ-3)

மீட்பு நிதிக்கடன் மீளளிப்பு

அடுத்த வாரம் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-30க்கும் 11-30க்கும் இடையில் சாவகச்சேரி தேவாலய வீதியில் அமைந்துள்ள டிறிபேக் கல்லூரித் தொடக்கப் பாடசாலையிலும், பி.ப 3-30 க்கும் 4-30 க்கும் இடையில் பருத்தித்துறை வடஇந்து மகளிர் கல்லூரியிலும் தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு நடைபெறும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறை அறிவித்துள்ளது.

வலிகாமத்திலிருந்து இடம்பெயர்ந்து வன்னியில் வதிபவர்களின் [illegible] வன்னியில் மீளளிப்பு செய்யப்படும் [illegible] [illegible] அறிவிக்

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வயலின் சுருதிப்பெட்டி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: செ. சிவசம்பு, மாவடிப் பிள்ளையார் வீதி, மீசாலை கிழக்கு, மீசாலை. (40771)

நஷனல் T. V. கலர் 20'', புதிய தட்டச்சு யந்திரம் ஆங்கிலம் (Portable), புதிய மேசை மின் விசிறி, இரத்த அமுக்கம் பார்க்கும் கருவி (Sphygnomano Meter), பாவித்த மேசை, மின் விசிறி க. நடராசா, சப்பச்சிமாவடி, சங்கத்தானை கிழக்கு, சாவகச்சேரி. (40662)

T. V பூஸ்ரர், வயர், அன்ரனா என்பன விற்பனைக்கு உண்டு. மருந்தகம், கண்டி வீதி, கொடிகாமம் (40669)

தேவை

தனி வீடு அல்லது அடிப்படை வசதிகள் கொண்ட பகுதிக் குடியிருப்பு வாடகைக்கு தேவை. 2000/- ரூபாவுக்கு மேல் வாடகை வழங்கப்படும். சாவகச்சேரியில் இருந்து இரண்டு மைல் சுற்று வட்டாரத்தில் அமைந்திருப்பது விரும்பத்தக்கது. தொடர்பு: சோ. சிறீதரன், இராமலிங்கம் வீதி, சாவகச்சேரி. (A. G. A காரியாலயம் அருகில்.)

தரமான ஒலிபெருக்கி சாதனம் தேவை. தரம்-60w. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: போரூட், சுப்பர் மடம், பருத்தித்துறை. (40138)

சாய்மனைக் கதிரை, உருக்கு கபினெட் (Steel Cabinet) தேவை. விற்க விரும்புவோர் விலை விவரங்களுடன் தொடர்புகொள்ளவும். E.செல்லத்துரை, 'உமா இல்லம்', சரசாலை தெற்கு, சாவகச்சேரி. (40783)

போத்தல்கள் தேவை

ஹொர்லிக்ஸ் / விவா (பிளாஸ்ரிக் மூடியுடன்), பியர், நெல்லிக்கிறஷ், ஜாம், கோடியல் போத்தல்களை நெல்லியடியில் உள்ள சுபாஸ் பேக்கவுஸ், சாயிக்கிருஷ்ணா (வதிரி), கண்ணன் களஞ்சியம், கௌரி வியாபார நிலையம், சிறீமுருகன் ஸ்ரோர்ஸ், திருவருள் ஸ்ரோர்ஸ், மிருசுவிலில் உள்ள வதனிகா களஞ்சியம், ஆசைப்பிள்ளை ஏற்றம்- வேல் களஞ்சியம் ஆகியவற்றில் ஒப்படைத்து பணத்தைப் பெற்றுக்கொள்ளவும். ரேஸ் லைன் இன்டஸ்ரீஸ் தனி) லிமிட். (சி-4002)

சனி மாற்றம்

16 - 2 - 96 சனிமாற்றம் (இந்தியப் பஞ்சாங்கங்களின் படி கணிக்கப்பட்டது. 18 பக்கங்களுடையது) ரூபா 10/-. எங்கும் விற்பனையாகின்றது. எழுதியவர் சத்யா, ராகு, கேதுவுடன் சனி சேர்க்கை நாட்டிற்கு நன்மை அல்ல. [40763]

தபால் விநியோகம்

வடமராட்சி, பெப். 18

லங்கா முடித கப்பலில் வந்த 246 வெளியூர் தபால் பொதிகள் நேற்று நண்பகல் கப்பலில் இருந்து இறக்கப்பட்டு, பருத்தித்துறை தபால் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன.

இன்று விடுமுறை தினமாதலால் தபால் விநியோகம் எதுவும் இடம்பெறாது.

வடமராட்சிப் பகுதிக்கான வெளியூர்த் தபால்கள் நாளை முதல் விநியோகம் செய்யப்படும்.

வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகளுக்கான தபால் பொதிகள் நாளை பருத்தித்துறையிலிருந்து சாவகச்சேரியிலுள்ள யாழ். பிரதம தபாலகத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அப்பகுதிகளுக்கான தபால் நாளை மறுதினம் முதல் விநியோகம் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படு[illegible]

சுகாதார, போசாக்கு நிலை

செஞ்சிலுவைச் சங்கம் தொடர்ந்து கண்காணிப்பு

சாவகச்சேரி, பெப். 18

வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்த மக்களின் சுகாதார போசாக்கு நிலைமையை கண்காணிக்கும் பணியை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மேலும் தொடர முடிவு செய்துள்ளது.

கடந்த வாரம் இங்கு வந்திருந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஆசிய பிராந்திய சுகாதாரத்துறை பிரதிநிதியான மிச்சில்லி ஜேன் மாரி வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் உள்ள அகதி முகாம்களுக்கு விஜயம் செய்து அங்குள்ள மக்களின் சுகாதார போசாக்கு நிலை குறித்து ஆராய்ந்தார்.

இங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்து திருப்தி தெரிவித்த அவர், சுகாதார, போசாக்கு நிலைமையை கண்காணிக்கும் பணியை தொடர அனுமதி வழங்கினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

மானிப்பாய்

பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ. து)

வருடாந்த

பொதுக்கூட்ட அறிவித்தல்

சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் 03 பங்குனி 1996 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். பொதுச்சபை உறுப்பினர்கள் தங்கள் பிரேரணைகளை 21-02-96ஆம் திகதிக்கு முன் செயலாளர், மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கச்சாய் றோட் 1ஆம் ஒழுங்கை, கொடிகாமம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

மா. குமாரசாமி,
தலைவர்.

சி. கந்தசாமி
செயலாளர்.

(40781)

பயிலுநர் ஆசிரியர்

போட்டிப் பரீட்சை

எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள பயிலுநர் ஆசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பரீட்சை பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள தொடர்பு கொள்ளவும்.

காலம்: 18 — 02 — 96 மு. ப. 9. 00 மணி
ஆசிரியர்: திரு. T. லோகநாதன் (B. A)
முகவரி: ஞானோதய அக்கடமி
கண்டி வீதி, சாவகச்சேரி.

(40664)

லலிதா மின்சார மருந்து

★ தலையிடி ★ தடிமன், நோவு
★ வாயுப்பிடிப்பு

முதலிய அனேக நோய்களுக்கு சிறந்த மருந்து

லலிதா தொழிற்சாலை,

சுதுமலை.

உள்ளூர் உற்பத்தி

(40770) V. L.

தொடர்பு கொள்ளவும்

சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட தில்லைநாதன் சிவநேசன் என்பவரை சகோதரி திருமதி ஜெயதேவி கிருஸ்ணசாமி, சரா அண்ணையின் இல்லத்தில் சந்திக்க விரும்புகின்றார். அவரின் தற்கால இருப்பிடம் தெரிந்தோரும் கீழ்க் காணும் முகவரிக்கு தகவல் அனுப்பி உதவவும்.

திருமதி ஜெய கிருஷ்ணசாமி
C/o. திரு சரா தாமோதரம்,
தாமோதரம்பிள்ளை வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(40673)

இடமாற்றம்

குரு டீசல் பொறியியலாளர்கள்
GURU DIESEL ENGINEERS

எமது ஸ்தாபனம் தற்போது பின்வரும் முகவரியில் இயங்குகிறது என்பதை அனைத்து டீசல் வாகன உரிமையாளர்களுக்கும் மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

93, நுணாவில் - கல்வயல் வீதி,
சாவகச்சேரி

[மகளிர் கல்லூரி வீதி- நுணாவில் - கல்வயல் வீதி. சந்திக்கும் இடம் (செல்வராசா வீதி]

(40663)

31-ம் நாள் நினைவஞ்சலி

பேரம்பலம் பரமேஸ்வரநாதன்

தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரியில் பல வருடங்களாக விஞ்ஞான ஆசிரியராகச் சேவை மனப்பான்மையுடன் கடமை புரிந்து பின் பலாலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரியில் அதிபராகக் கடமை புரிந்து இளைப்பாறிய காலத்தில் இறைவனடி சேர்ந்த அமரர் பேரம்பலம் பரமேஸ்வரநாதன் அவர்களது ஆத்மா சாந்தியடைய பிராத்திக்[illegible]றோம்.

அ[illegible], ஆசிரியர்கள்,
ப[illegible]

[illegible]காஜனக் கல்லூரி,
தெல்லிப்பளை

வீடியோ கசெட்டுகள் தேவை

குழந்தைகள் பார்த்து மகிழ்வதற்கான கார்ட்டூன் மற்றும் பறவைகள், விலங்குகள் போன்றவற்றின் வாழ்க்கை வட்டங்களைக் காட்டும் படங்கள், அறிவியல் படங்கள் கொண்ட வீடியோ கசெட்டுகள் தேவை.

தொடர்பு கொள்க:

E. செல்லத்துரை,
''உமா இல்லம்''
சரசாலை தெற்கு, சாவகச்சேரி.

(40784)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்:
04
—
05
—
1927

மறைவு:
19
—
01
—
1996

ஊரெழு மேற்கு

அமரர்

பேரம்பலம் பரமேஸ்வரநாதன்

(ஓய்வுபெற்ற முன்னாள் அதிபர், பலாலி அரசினர் ஆசிரியர் கலாசாலை, வசாவிளான்)

அன்பாலும், பண்பாலும் எம்மை வழிநடத்தி வாழ்வு தந்த பெரும் தகையே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும், எம் இதயத்தில் என்றென்றும் இடம்பெற்று வாழ்வீர்கள்! உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியையில் கலந்துகொண்ட பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், மரணச் சடங்கில் கலந்து இரங்கல் உரை நிகழ்த்திய பெரியோர்கள் மற்றும் வேறு வகையில் உதவியவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னார் அராலி வடக்கு, கற்பித்தான் வழித்தோன்றல் காலஞ்சென்ற கதிரவேலு பேரம்பலம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், வர்த்தலைவிளான் காலஞ்சென்ற ஆசிரியமணி R.T. சிவரத்தினம், திருமதி சுகிர்தம்மா சிவரத்தினம் ஆகியோரின் சிரேஷ்ட புத்திரி தேவமலரின் கணவரும், பாமதி (ஆசிரியை, மத்திய மகாவித்தியாலயம், வசாவிளான்), ராதா, இரவீந்திரன் (போர்மன், மஸ்கன்ஸ் லிமிற், கொழும்பு) ஆகியோரின் தந்தையாரும், திருமதி லில்லிமலர் விஸ்வலிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு), திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியை, கனடா), Dr. சொர்ணகாந்திமலர் துரைராசசிங்கம் (றேடியோலிஸ்ற், U. K.), திருமதி தவமலர் விவேகானந்தராஜா (ஓய்வுபெற்ற ஆசிரியை, கொழும்பு), திருமதி புஸ்பமலர் சுந்தரலிங்கம் (வனவள ஆராய்ச்சித் திணைக்களம், மலேசியா), Dr. வித்தியானந்தன் (ஆஸ்திரேலியா), திரு. சிவானந்தன் (ஓய்வுபெற்ற ஆசிரியர், கொழும்பு), காலஞ்சென்ற பொறியியலாளர் விவேகானந்தன், திரு. யோகரத்தினம் (உதவிப் பொறியியலாளர், ஆஸ்திரேலியா), Dr. செல்வானந்தன் (U.K.) ஆகியோரின் சகோதரரும்—

காலஞ்சென்ற செ. விஸ்வலிங்கம் (ஓய்வுபெற்ற ஆணையாளர், சிறு கைத்தொழில்), திரு வே. வேலாயுதபிள்ளை (ஓய்வுபெற்ற உதவி ஆணையாளர், பரீட்சைத் திணைக்களம், கனடா), திரு. செ. விவேகானந்தராஜா (ஓய்வுபெற்ற தபால் உப அதிபர்), திரு. கு. சுந்தரலிங்கம் (பட்டயக் கணக்காளர், வருமானவரி திணைக்களம், மலேசியா), காலஞ்சென்ற லீலாவதி, திருமதி சி. இராஜஇராஜேஸ்வரி (கணக்காளர், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், கொழும்பு), திருமதி வி. கோகிலாம்பாள் (கனடா), திருமதி யோ. மனோரஞ்சிதம் (மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர், ஆஸ்திரேலியா), திருமதி Dr. செ. சிவசெங்கா (U.K.) ஆகியோரின் மைத்துனரும்—

செல்வி சத்தியதேவி (கொழும்பு), திருமதி சி. திவ்வியராணி (Project Officer, N.I.E., Maharagama), செல்வி தேவரஞ்சிதம் (கொழும்பு), திரு. J.V. துரைராசசிங்கம் (என்ஜினியரிங் கொன்சல்ரன், கொழும்பு), காலஞ்சென்ற ஆசிரியர் J. செல்வராஜசிங்கம், திரு. E.S. விஜயராசசிங்கம் (ஓய்வுபெற்ற கணித ஆசிரியர், மல்லாகம்), திரு. சி. அரியராசசிங்கம் (கட்டடப் பொருள் மதிப்பீட்டாளர், கொழும்பு), திரு. சி. சுகிர்தராசசிங்கம் (அத்தியட்சகர், என்ஜினியறிங் வேக்ஸ், எயர் லங்கா, கொழும்பு), திரு. சி. தேவராசா சிங்கம் (சவுதி), திரு. கருணேந்திரன் (இயந்திரப் பொறியியலாளர், கனடா) ஆகியோரின் மனைவி வழி மைத்துனரும் ஆவார்.

உங்கள் பிரிவால் துயருறும்;

மனைவி: மக்கள்,
சகோதரர், மைத்துனர்.

[illegible] முகவரி:
தற்போதை[illegible]வமலர் பரமேஸ்வரநாதன்,
திருமதி தே[illegible]ரு. க. திருக்குமரன்,
[illegible]

(40724)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத்தின்

விஷேட பொதுக்கூட்டம்

19-2-96 திங்கள் காலை 10 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விஷேட பொதுக்கூட்டம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும்.

எஸ். சிவலிங்கராஜா
செயலாளர்

(சி 4050)

தூரத்து மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

தூரத்து மக்கள் முற்பதிவின்றி குறித்த நேரத்தில் பிரபல வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெற நாடுங்கள்

யாழ் கிளினிக் சென்ரர்

(தனியார்)

பிரபல வைத்திய நிபுணர்களின் ஆலோசனை நிலையம்
(மந்திகை ஆஸ்பத்திரி முன்பாக)

மந்திகை

- ★ குழந்தை வைத்தியம் — செவ். வியா. சனி காலை 9- 30
- ★ தோலும், பல்லும் — தினமும் காலை 10- 30 (ஞாயிறு தவிர)
- ★ காது, மூக்கு, தொண்டை (ENT), — தினமும் காலை 11- 00 (ஞாயிறு உட்பட)
- ★ மனநோய் — தினமும் காலை 11- 00 (வியா. ஞாயிறு தவிர)
- ★ மகப்பேறு — திங். புதன், வியா. சனி மதியம் 12. 00
- ★ சத்திர சிகிச்சை — தினமும் பி. ப. 12- 30 (ஞாயிறு தவிர)
- ★ மருத்துவம்/பொது வைத்தியம் (V.P) — தினமும் மாலை 2- 30 (ஞாயிறு தவிர)

இவ்விளம்பரத்தின் அடிப்படையில் வரும் நோயாளருக்கு மேலும் சலுகை வழங்கப்படும்.

(40143)

ஆண்டு 5 - புலமைப்பரிசில்

மாதிரி பயிற்சி வினாத்தாள்கள்

(விடைகளுடன்)

அடுத்த வெளியீடு:

1995 பிரிவு மாணவர்களுக்காக 18 - 02 - 96
(மாதத்தின் முதலாவது, மூன்றாவது ஞாயிற்றுக்கிழமைகளில்)

1996 பிரிவு மாணவர்களுக்காக - 25 - 02 - 96
(மாதத்தின் இரண்டாவது, நான்காவது ஞாயிற்றுக்கிழமைகளில்)

எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் பெறலாம்

வெளியீடு: BOND

(40142)

மரண அறிவித்தல்கள்

திருமதி

மரியப்பிள்ளை மிக்கேல்பிள்ளை

(மரியாச்சி)

யாழ்/சென் பற்றிக்ஸ் வீதியை வசிப்பிடமாகவும், தற்போது அல்லாரை வடக்கு கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியப்பிள்ளை (மரியாச்சி) நேற்றுக் காலமானார்.

இவர் திரு. மனுவல் மிக்கேல்பிள்ளையின் அன்பு மனைவியும், M. A. கிறிஸ்ரி (யாழ். மாநகர சபை ஓவியர்), ஜெறாட் (டென்மார்க்), கிளறன்ஸ் (யாழ்/ ப. நோ. கூ. சங்கம்), திருமதி ரூபசிங்கம் (யாழ்ப்பாணம், சாவகச்சேரி விளையாட்டுத்துறை அதிகாரி), கலிஸ்ரஸ் (ஹொலண்ட்), லெனாட் (பிரான்ஸ்), பேனாட் பவி (ஹொலண்ட்), சகாயதேவி (சங்கீத ஆசிரியை, யாழ் / சென். சாள்ஸ் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற துரை நல்லம்மா அவர்களின் அன்புச் சகோதரியும், அன்ரனிற்றா, லலிதா, லில்லி, அஜந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், டிலோசனா, டிலோசன், ஜெரி, ஜெவ்றின், ஜோசப், பெபியன், மரீன்சங்கா, சரோன் பிரியங்கா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18 - 02 - 96) பி. ப. 3 மணியளவில் அல்லாரை வடக்கு சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ம. மிக்கேல்பிள்ளை
(ஆசாரியார்)
(கணவர்)

(40787)

திருமதி எட்வேட் விக்ரோறியா

(பாக்கியம்)

யாழ்ப்பாணம் இல. 35/2, பழைய பூங்கா வீதியைச் சேர்ந்த திருமதி எட்வேட் விக்ரோறியா (பாக்கியம்) நேற்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற எட்வேட் அரியகுட்டி அவர்களின் மனைவியும், காலஞ்சென்ற சிப்பிறியன் அவர்களின் சகோதரியும், திருமதி சந்திரா அமலதாஸ், எட்வேட் ஜேர்ஜ் ஆகியோரின் தாயாரும், அமலதாஸ், சகாயமலர் ஆகியோரின் மாமியாரும், A. S. நிசாந்தன், நிரோன் (யாழ். பல்கலைக்கழகம்), A. S. சியான், (யாழ். புனிதபத்திரிசியார் கல்லூரி), ஜெகான், டிசான் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் மிருசுவில் புனித நீக்[illegible] சேமக்காலையில் இன்று (18 - 02 - 96) பிற்பகல் 2. 30 மணிக்கு நடைபெறும்..

தகவல்:
எட்வேட் ஜோர்ஜ் (மகன்)
M. அமலதாஸ் (மருமகன்)

கரம்பகம்,
மிருசுவில்.

(40786)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

இந்தியாவின் தலையீடு

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக, அவர்களை வென்று விடுவதற்காக ஸ்ரீலங்கா அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு இந்திய மத்திய அரசாங்கம் பக்கபலமாக இருந்து வருகிறது என்பது வெளிப்படையாக நிரூபணமாகி உள்ளது.

கடந்த புதன்கிழமை முல்லைத்தீவில் விடுதலைப் புலிகளின் கப்பலின் நடமாட்டம் குறித்து ஸ்ரீலங்கா கடற்படைக்கு இந்தியக் கடற்படையே துப்புக் கொடுத்திருக்கிறது. அதனை ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் ஒப்புக்கொண்டுவிட்டன

விடுதலைப் புலிகளின் கப்பலை சேதப்படுத்துவதிலும் இந்தியா உதவியிருக்கிறது. ஆனால் அதனை ஊர்ஜிதம் செய்வதற்கு ஸ்ரீலங்கா படைவட்டாரங்கள் பின்னடிக்கின்றன. கருத்துச் சொல்ல முடியாது என்ற மௌனம் சம்மதத்துக்கு அறிகுறியே.

கப்பலைச் சேதமாக்கும் தாக்குதல் நடவடிக்கையில் இந்தியாவின் உதவி பெறப்பட்டதை ஊர்ஜிதம் செய்தால், கடற்புலிகளைத் தம்மால் தனித்துத் தோற்கடிக்க முடியாமற் போயிற்று என்ற தமது பலவீனத்தை ஒப்புக் கொண்டதாகிவிடும் என்று ஸ்ரீலங்காவின் பாதுகாப்பு அதிகாரிகள் நினைத்திருப்பர்.

தங்களுக்கு உதவிய இந்தியாவைக் காட்டிக் கொடுப்பதால் மீண்டும் அத்தகைய உதவிகளைப் பெறமுடியாமற் போய் விடுமோ என்ற அச்சமும் அவர்களுக்கு இருக்கும்.

விடுதலைப் புலிகளை ஒடுக்குவதற்காக, பலவீனப்படுத்துவதற்காக ஸ்ரீலங்கா அரசுக்கு இராணுவத் தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு சந்திரிகா அரசாங்கம் பல நாடுகளிடம் இரகசியமாகக் கேட்டிருந்தது. ஏனைய நாடுகளை முந்திக் கொண்டு இந்தியா அந்த உதவியைச் செய்ய முன்வந்தது. ஆனால் அதனை உத்தியோகபூர்வமாக வெளிக்காட்டாமல் இரண்டு அரசுகளுமே மறைத்து வந்தன.

யாழ்ப்பாணத்தின் மீதான "சூரியப் பிரகாசம்" தாக்குதலின் போது ஸ்ரீலங்காப் படைகளுக்கு விடுதலைப் புலிகளின் நகர்வு குறித்து துப்புக் கொடுக்கும் இராணுவத் தொழில்நுட்ப உதவியை இந்தியா வழங்கியிருந்தது. அதனை ஸ்ரீலங்கா அரசு வெளிப்படுத்தவில்லை.

விடுதலைப் புலிகளை ஸ்ரீலங்கா தனித்துப் பலவீனப்படுத்த முடியாது. அதனால் இந்தியாவுடன் சேர்ந்து தான் தனது முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது என்பது பகிரங்கமாகக் கூடாது என்பதில் ஸ்ரீலங்கா மிக அவதானமாகவே இருக்கிறது.

எப்படியோ—

விடுதலைப் புலிகளின் கப்பல் மீது ஸ்ரீலங்கா கடற்படையுடன் கூட்டுச் சேர்ந்து இந்தியக் கடற்படையும் தாக்குதல் நடத்தி இருக்கிறது.

இது இலங்கையின் உள்நாட்டு விடயத்தில் இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிட்டதற்கு ஒப்பானதாகும். சமாதானப் பேச்சுவார்த்தைக்கோ, மத்தியஸ்தத்துக்கோ மூன்றாம் தரப்பு வேண்டாம் என்று நிராகரிக்கும் சந்திரிகா, இராணுவத் தீர்வு காணும் பொருட்டு இந்தியாவைத் தலையிட அனுமதித்துள்ளார்; தாமே கேட்டுப் பெற்றுள்ளார்!

ஸ்ரீலங்காவும் இந்திய மத்திய அரசும் கூட்டுச் சேர்ந்து விடுதலைப் புலிகளைப் பலவீனப் படுத்த நினைப்பது, அதனை நோக்கிச் செயற்படுவது என்பன —

ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை இராணுவ பலத்தினால் நசுக்கி விடுவதற்காகவே.

இந்தத் தலையீட்டை உலக நாடுகள் குறிப்பாக அமெரிக்கா போன்ற மேற்கு நாடுகள் கவனத்திற்கொள்ளட்டும்.

தென்னாசியப் பிராந்தியத்தில்,தானே சட்டாம்பிள்ளை நாடாகத் திகழ வேண்டும் என்ற வல்லாதிக்க சிந்தனையை, இந்தியா இன்னும் கைவிட்டு விடவில்லை என்பதனை உலக நாடுகள் மனதில் கொள்ள வேண்டும்.

தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க ஆசிரியர் சங்கங்கள் ஒருமித்து முடிவு

புதிய அதிபர் சேவை, சம்பளத் திட்டம் இழுத்தடிப்பு

சாவகச்சேரி, பெப். 18

புதிய அதிபர் சேவையையும் சம்பளத் திட்டத்தையும் அமுல் செய்வதை அரசு பின்னடித்து வருவதைக் கண்டித்து மார்ச் 15 ஆம் திகதி முதல் ஆசிரிய தொழிற் சங்கங்கள் தொடர்ச்சியாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதென முடிவு செய்துள்ளன.

கல்வியமைச்சு அதிகாரிகளுக்கும், ஆசிரியர் தொழிற் சங்கங்களுக்கும் இடையில் நடந்த பேச்சுக்களில் எதுவித இணக்கநிலை ஏற்படவில்லை என்றும்—

மார்ச் 7 ஆம் திகதி கல்வியமைச்சர் தொழிற்சங்கங்களுடன் பேச்சு நடத்தவிருப்பதாகவும் —

இணக்க நிலை ஏற்படாத பட்சத்தில் 15 ஆம் திகதி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவதெனவும்— முடிவு செய்யப்பட்டுள்ளதாக பேச்சுக்களில் பங்குபற்றி திரும்பியுள்ள இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட தலைமைப் பொதுச் செயலாளர் திரு. த. பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

ஏற்கனவே தொழிற்சங்கங்களுடன் ஏற்பட்ட புள்ளித் திட்ட அடிப்படையை அமைச்சு அதிகாரிகள் மாற்றம் செய்ய முயன்று வருவதாலேயே இழுபறி இருப்பதாகவும்—

தற்போதைய அதிபர்களை உள்வாங்குவதில் மாத்திரம் கல்வியமைச்சு அதிகாரிகளுக்கும், தொழிற்சங்கத்துக்கும் இடையில் வேறுபாடு உள்ளதாகவும் —

ஏற்கனவே அமைச்சினால் விளம்பரப்படுத்தப்பட்டு சேகரிக்கப்பட்டு அதிபர்களின் சுயவிபரங்களை ஒழுங்குபடுத்தி முடிப்பதில் ஏற்பட்ட தாமதமும் முடிவெடுக்கப்படாமைக்கு ஓர் முக்கியகாரணம் என்றும் — அவர் மேலும் கூறினார். (இ-3)

கிடுகுக்குப் பதிலாக வேறு பொருள்கள் பயன்படும்

கிளிநொச்சியில் புதிய ஏற்பாடு

வன்னியில் ஏற்பட்டுள்ள கிடுகு தட்டுப்பாட்டையடுத்து, வேறு பொருள்களைக் கொண்டு கொட்டில்களை வேய புதிய முறை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பழுதடைந்த, முறிந்த தென்னோலை, பனை ஓலை, வைக்கோல் ஆகியவற்றைக் கொண்டு கொட்டில்களை வேயும் இந்த புதிய முறையை கிளிநொச்சி ஒ. எம். ஐ. நிறுவனப் பிரதிநிதியான லூட்விக் ராஜி கண்டுபிடித்துள்ளார்.

இந்தப்புதிய முறையை இந்த நிறுவனம் கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லைநடராசாவின் ஒத்துழைப்புடன் மக்களுக்கு அறிமுகப்படுத்தவிருக்கிறது.

இந்த முறையை விளக்கும் கண்காட்சி ஒன்று வட்டக்கச்சி சூசையப்பர் ஆலய முன்றலில் நடத்தப்படவிருக்கிறது. (இ-3)

யாழ் பல்கலைக்கழக மூதவைக் கூட்டம்

சாவகச்சேரி, பெப். 18

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் மூதவைக்கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பகல் 1-30 மணிக்கும் —

பேரவைக் கூட்டம் 22ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கும் — சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறும். (இ-7)

வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் 42,000 இடம்பெயர்ந்த மாணவர்

சாவகச்சேரி, பெப். 18

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த மாணவர்களில் 42,000 பேர் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் தங்கியுள்ளனர் என்று —

கல்விப் பகுதியினர் கடந்த வாரம் மேற்கொண்ட கணக்கெடுப்பு மூலம் தெரியவந்துள்ளது.

வலிகாமத்தில் இயங்கிய 312 பாடசாலைகளில் மொத்தம் 1 லட்சத்து 27 ஆயிரம் மாணவர்கள் கல்வி கற்றனர்.

தென்மராட்சியில் 33 ஆயிரம் மாணவர்களும், வடமராட்சியில் 8 ஆயிரம் மாணவர்களும் தங்கியுள்ளதாக கல்வி வலயங்கள் இரண்டும் நடத்திய கணக்கெடுப்பின் போது பதிவாகியுள்ளது.

இந்த எண்ணிக்கை 50 ஆயிரம் வரை உயரலாம் என்று மதிப்பிடப்படுகிறது.

வன்னிப் பகுதிக்கு சுமார் 57 ஆயிரம் வலிகாமம் மாணவர்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்றும் மதிப்பிடப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் சாவகச்சேரி, மீசாலை, மட்டுவில் ஆகிய பிரிவுகளில் 25 சதவீதமான மாணவர்கள் தங்கியுள்ளனர் என்ற விவரமும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை —

தென்மராட்சியைச் சேர்ந்த 25 ஆயிரம் மாணவர்களும், வடமராட்சியைச் சேர்ந்த 35 ஆயிரம் மாணவர்களும் பாடசாலை வசதியின்றி இருப்பது தெரிந்ததே. [அ-3]

இடம்பெயர்ந்த மாணவர் கல்விக்கு விசேட ஏற்பாடு

சாவகச்சேரி, பெப். 18

வலிகாமத்தில் இருந்து வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ள மாணவர்களுக்கு கல்வி அளிக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இடம்பெயர்ந்த மாணவர்கள் தங்கியுள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் உள்ள வசதிகளுக்கு ஏற்ப அவர்களை அனுமதிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி பாடசாலைகளை காலை நேரம் பாடசாலைகளாக நடத்தவும் —

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்த பாடசாலைகளை கூட்டாக-- 5 அல்லது 6 பாடசாலைகளை ஒன்றாக — வடமராட்சி, தென்மராட்சிப் பாடசாலைக் கட்டடங்களில் மாலை நேரப் பாடசாலைகளாக நடத்தவும்— ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

5 அல்லது 6 பாடசாலைகள் ஓரிடத்தில் நடத்தப்படும்போது, அந்தப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் அங்கு பணியாற்றுவார்கள் என்றும்—

மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து காலக்கிரமத்தில் அப்பாடசாலைகள் தனித்து இயங்க அனுமதிக்கப்படலாம் என்றும்— கல்வி திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

பங்கீட்டு அட்டைக்கு பதிலாக நிவாரண முத்திரைகள்

6 ஆம் கட்டத்திலிருந்து அமுலாகும்

இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணம் வழங்கும் முறையில் விரைவில் மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு அவர்களின் பங்கீட்டு அட்டையே இதுவரை பயன்படுத்தப்பட்டு வந்தது.

புதிய திட்டத்தின்படி இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரண முத்திரைகள் கிராம சேவையாளர்கள் மூலமாக வழங்கப்படவிருக்கின்றன.

பங்கிட்டு அட்டைக்குப் பதில் இனிமேல் முத்திரைகளை சமர்ப்பித்தே நிவாரணம் பெறவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்படவிருக்கும் 5 ஆம் கட்ட நிவாரணம், பங்கிட்டு அட்டையில் பதிந்தே வழங்கப்படும் என்றும்—

6 ஆம் கட்டத்தில் இருந்தே முத்திரை மூலம் நிவாரணம் வழங்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ-3]

தமிழ் மக்களின் பாதுகாப்பு குறித்து மாதாந்தம் உயர்மட்ட மாநாடு

ஈ. பி. டி. பி.யினர் கோரிக்கை

கொழும்பு, பெப். 18 [illegible] மாநாடு ஒன்று மாதாந்தம் நடத்தப்பட வேண்டும்.

—இவ்வாறு ஈ. பி. டி. பி. [illegible] முன்தினம் நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸைச் சந்தித்துப் பேசியபோது கோரிக்கை விடுத்தனர் என்றும்—

அத்தகைய மாநாட்டை நடத்துவதற்கு தாம் ஏற்பாடு செய்வதாக அமைச்சர் [illegible]றும்— கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

இந்த மாநாட்டுக்கு அனைத்துத் தமிழ்க் கட்சி[illegible] [illegible] ஈ. பி. டி. [illegible] தெரிவித்துள்ளது.

புலிகளின் தாக்குதலுக்கு சந்திரிகா கூறும் காரணம்

கொழும்பு, பெப்.18

விடுதலைப் புலிகள் இராணுவ ரீதியில் தோல்வியடைந்து வருவதால் அவர்கள் கொடூர தாக்குதல்களில் ஈடுபட்டுவருகின்றனர்.

இப்படி ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளை தோற்கடிப்பதற்கு வேண்டிய சக்தி, இராணுவ பலம், மற்றும் சர்வதேச ஆதரவு எமக்கு உண்டு.

விடுதலைப் புலிகள் மேலும் வன்முறைகளில் ஈடுபடுவார்கள். ஆகையால் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நாம் சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். —

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

நிபந்தனையின் அடிப்படையிலேயே இனிப் புலிகளுடன் பேச்சுவார்த்தை

சந்திரிகா மீண்டும் தெரிவித்தார்

கொழும்பு, பெப். 18

சமாதானப் பேச்சுக்களை அரசாங்கம் இன்னும் கைவிடவில்லை, எனினும் விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையின் அடிப்படையிலேயே பேச்சுவார்த்தை நடத்தப்படும், அதாவது விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவதற்கு இணங்கவேண்டும்.

ஜனாதிபதி சந்திரிகா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று இந்திய — பாகிஸ்தானிய கிரிக்கட் அணிகளுக்கு வரவேற்பு அளிக்கும் வைபவத்தில் ஜனாதிபதி கலந்து கொண்டார்.

அதன் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்; (இ-6)

வடமராட்சி கிழக்கு மக்கள் வைத்திய சேவை ஏற்பாடு

மந்திகை, பெப். 18

வடமராட்சி கிழக்கு அம்பன், குடத்தனை, நாகர்கோவில், மருதங்கேணி பகுதிவாழ் மக்களின் வைத்திய தேவைகள் தற்போது இலகுவாக்கப்பட்டுள்ளன.

பருத்தித்துறைக்கு நியமிக்கப்பட்டுள்ள பதில் சுகாதார வைத்திய அதிகாரி மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகளினால் இப்பகுதி மக்கள் தமது பகுதிகளிலேயே வைத்தியசேவையைப் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஐந்து வருடங்களுக்கு மேலாக பருத்தித்துறைப் பகுதி, சுகாதார வைத்திய அதிகாரி அற்ற நிலையில் பதில் சுகாதார வைத்திய அதிகாரியின் சேவையுடனேயே இயங்கிவந்தது.

கடந்த காலங்களில் பதில் சுகாதார வைத்திய அதிகாரியாக மந்திகை அரசினர் வைத்தியசாலை வைத்திய அதிகாரியான டாக்டர் கதிரவேற்பிள்ளையே கடமையாற்றிவந்தார்.

தற்போது யாழ். மாநகர வைத்தியஅதிகாரியான டாக்டர் இ. தெய்வேந்திரன் பதில் சுகாதார வைத்திய அதிகாரியாக கடமை ஏற்றுள்ளார்.

இவர் வாரத்தில் நான்கு நாள்கள் வடமராட்சிகிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்து வைத்திய சேவையை வழங்கும் நடவடிக்கையினை மேற்கொண்டுவருகிறார். (இ-15)

வதந்தி குறித்து எச்சரிக்கை

கொழும்பு, பெப். 18

மக்கள் மத்தியில் குரோதங்களைத் தூண்டக் கூடியவிதத்தில் வதந்திகள் பரப்பப்பட்டு வருவதாகவும் —

இப்படியானவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் — பொலீஸ்மா அதிபர் ராஜகுரு எச்சரித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கிக் கட்டடத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலின் பீதி நிலை முற்றாகத் தணிய முன்னர் குடிதண்ணீரில் நஞ்சு கலக்கப்பட்டிருப்பதாக வதந்தி பரப்பட்டிருப்பதாகவும் இனக்கலவரத்தைத் தூண்ட இப்படியான சக்திகள் முயல்கின்றன என்றும் அவர் மேலும் கூறினார்; (இ-7)

வருமானம் பெறக் கூடிய சுயதொழில் திட்டங்கள்

ஐ. நா. தூதரகம் அமுல் செய்யும்

சாவகச்சேரி, பெப். 18

யாழ். மாவட்டத்தில் வருமானம்பெறத் தக்கவகையில், சுயதொழில் சிறுதிட்டங்களை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் நடைமுறைப் படுத்தவிருக்கிறது.

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழில் வாய்ப்பு மூலம் வருமானத்தைப் பெறும் வகையில் இயங்குகின்ற ஓர் அரசசார்பற்ற அமைப்பு மூலம் இத்திட்டத்தைச் செயல்படுத்த அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் இணங்கியுள்ளதாகவும் —

அடுத்த மாதத்தில் இத்திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் — அவர் தெரிவித்தார்.

வீதியமைப்பு, குடிதண்ணீர் வசதிக்காக குழாய்க்கிணறு அமைத்தல், மலசலகூடங்கள் அமைத்தல், சுகாதார, போசாக்கு பேணுதல், சனசமூக நிலையங்களை அமைத்தல், முன்பள்ளிகள் அமைத்தல், பாடசாலைகள் அமைத்தல், விவசாய உற்பத்திகள், நீர்ப்பாசன வாய்க்கால்களை திருத்துதல், மீன்பிடி, வருமானத்தை அதிகரிக்கும் தொழில் ஆகியதுறைகள் சார்ந்ததாக இத்திட்டங்கள் அமையும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

சாவகச்சேரி பிரதேச செயளர் பிரிவில்

உறவினர்வீடு, நலன்புரி நிலையத்தில் உள்ளோருக்கும் நிவாரணப்பொருள்

சாவகச்சேரி, பெப் 18

இடம்பெயர்ந்துள்ள மக்களில் மேலும் 5 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்க, நிவாரணப் பொருள்களை செயர் இன்ரர்நஷனல் எடுத்து வரவிருக்கிறது.

குடும்பம் ஒன்றுக்கு வாளி, உடுபுடைவைகள் வழங்கத் தேவையான பொருள்களே எடுத்துவரப்படவிருக்கின்றன.

இந்தப் பொருள்களை எடுத்து வருவதற்கான அனுமதிக்கு பாதுகாப்பு அமைச்சிடம் கோரப்பட்டுள்ளதாகவும் —

அனுமதி கிடைத்ததும் அடுத்த கப்பலில் அவை எடுத்துவரப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இதுவரை 12ஆயிரம் குடும்பங்களுக்கு இதேவகையான நிவாரணப்பொருள்கள் ,வழங்கப்பட்டுள்ளதாகவும்—

மேலும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்க வேண்டியுள்ளதாகவும் — அந்த அமைப்பின் நிவாரணக் குழுத் தலைவர் செல்வி. கதி அற்பீல்ட் தெரிவித்தார். (இ-3)

தொலைக்கல்வி ஆசிரியர் பரீட்சை முடிவு தாமதம்

தொலைக்கல்வி மூலம் பயிற்சிபெற்ற யாழ். மாவட்ட பயிற்சி ஆசிரியர்களின் பரீட்சை முடிவுகள் வெளியாவதில் தாமதம் ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொலைக்கல்வி மூலம் யாழ். மாவட்டத்தில் 850க்கு மேற்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி பெற்றுவருகின்றனர்.

இவர்களுக்கான எழுத்து பரீட்சைகள் கடந்த வருட முற்பகுதியில் நடைபெற்றன

ஆனால் செய்முறைப் பரீட்சைகள் இதுவரை நடைபெற்று முடியவில்லை.

பகுதி I பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கு உடற்கல்வி, அழகியல் தொழிற்பாடுகள், [illegible]கத் தொழிற்பாடுகள் ஆகிய பாடத்துறைகளில் செ[illegible]முறையும்— [illegible] II பரீட்சைக்கு [illegible]றியவர்களுக்கு [illegible] பித்தற் பிரயோகம்' தொடர்பான செயல் முறையும் — இறுதி மதிப்பீடு செய்யப்படவில்லை.

மேற்படி செயல்முறைப் பாடங்களை நிறைவு செய்து மதிப்பீட்டு விவரங்களைக் கடந்த டிசம்பர் மாதத்துக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு தேசிய கல்வி நிறுவகம் அறிவுறுத்தி இருந்தது.

யாழ். மாவட்டத்தில் கல்விச் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்ததால் செயல் முறைப் பரீட்சைகளில் மதிப்பீட்டு விவரங்கள் உரிய வேளையில் தேசியக்கல்வி நிறுவகத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என அறியப்படுகின்றது.

செயல் முறைப்பா[illegible] விவரம் இல்லாமையால் பரீட்சை [illegible]வுகள் வெளியாவதில் தா[illegible]ம் ஏற்படலாம் என[illegible]

அம்புலன்ஸ் பழுது

மட்டுவில் வடக்கு, பெப். 18

அக்கராயன்குளம் அரசினர் வைத்தியசாலையிலுள்ள அம்புலன்ஸ் வண்டி பழுதடைந்து நீண்டகாலமாக திருத்தப்படாத நிலையில் உள்ளது. இதனை திருத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மேற்படி வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் ஏ. எப். அருள்நேசன் கிளிநொச்சி சுகாதார சேவை பிரதி மாகாண பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-135)

முதன்மை ஆசிரியருக்கு

சாவகச்சேரி, பெப். 18

வலயம் ஒன்றுக்கு உட்பட்ட முதன்மை ஆசிரியர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இயங்கும் கல்வி வலயம் ஒன்று அலுவலகத்துக்கு வருமாறு வலயம் ஒன்றின் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தன் கேட்டுள்ளார். [இ-7]

ஊசி மருந்து தட்டுப்பாடு

மட்டுவில் வடக்கு, பெப். 17

தென்மராட்சி,வடமராட்சி பிரதேசங்களிலுள்ள அரச வைத்திய சாலைகளில் பாம்புகடிக்கான ஊசி மருந்துக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. யாழ். சுகாதார திணைக்கள மாவட்ட மருந்துக் களஞ்சியத்திலும் இந்த ஊசி மருந்து கையிருப்பில் இல்லை என்று அறியப்படுகின்றது. (உ-135)

கூட்டுறவு பணியாளர் பயிற்சி நெறி

சாவகச்சேரி, பெப் 18

யாழ். மாவட்ட கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியினால் கடந்த வருடம் நடத்தப்பட்டு இடைநிறுத்தப்பட்ட கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர உயர்பிரிவுப் பயிற்சி நெறி மீண்டும் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9-00மணிக்கு பருத்தித்துறை வீதி, கொடிகாமத்தில் அமைந்துள்ள தென்மராட்சிகிழக்கு ப.நோ. கூ. சங்கத்து[illegible] [illegible]

மரண அறிவித்தல்கள்

தில்லைநடேசபிள்ளை சிவகுருநாதன்

கொடிகாமம் கச்சாய் வீதியை வசிப்பிடமாக கொண்ட தி. சிவகுருநாதன் நேற்று [17-02-1996] காலமானார். அன்னார் நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற தில்லைநடேசபிள்ளையின் (ஆசிரியர்) அன்பு மகனும், பராசக்தியின் பெறா மகனும், கோடீஸ்வரன் (ஜேர்மனி), திருநாவுக்கரசு (ஜேர்மனி), தேவராசா (பிரான்ஸ்), புனிதவதி (ஜேர்மனி), ரேவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி இமல்டா கோடீஸ்வரன் (ஜேர்மனி), தேவராசா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சோமசுந்தரம் சரஸ்வதி (மீசாலை), காலஞ்சென்ற வல்லிபுரநாதன் (ஆசிரியர்), காலஞ்சென்ற நாகேந்திரன் (R. M. P.), அண்ணாமலை (வரணி), திருமதி செல்வராணி அருந்தவநாயகம் (ஆசிரியை), சற்குணம் (பொருளியலாளர் –ஆபிரிக்கா), திருமதி விமலா விஜயகுமாரன் (தாதி, யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி அருட்சோதி யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-2-96) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் இவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொடிகாமம் கட்டை பறிச்சான் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி. நாகம்மா (மனைவி)

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(40788)

வீரவாகு கதிரமலை

அளவெட்டி-வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்டிருந்தவருமாகிய வீரவாகு கதிரமலை காலமானார்.

இவர் வீரவாகு — நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், சிவக்கொழுந்துவின் அருமைக் கணவனும், ஜெயக்குமார் (வர்த்தகர், சாவகச்சேரி), ஜெயதாஸ் (ஜேர்மனி), ஜெயசாந்தி (அம்பாள் மில், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பாக்கியலட்சுமி (ஆசிரியை, கிளி/வேம்பொடுகேணி சி. சி. த. க. பா.), மல்லிகா (ஜேர்மனி) ஆகியோரின் மாமனாரும், கீர்த்திகன், வனிதா, விமலா ஆகியோரின் பேரனும், பொன்னுத்துரை (அருள்), உருக்குமணி, மகேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், அன்னம்மா, காலஞ்சென்ற செல்லத்துரை, பொன்னுச்சாமி (ஓய்வுபெற்ற ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 18-02-96 ஞாயிறு பிற்பகல் 2. 00 மணிக்கு சாவகச்சேரி இல்லத்தில் நடைபெறும். உறவினர்களும், நண்பர்களும் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

தற்போதைய முகவரி:-
க. ஜெயக்குமார் [குமார்],
'புகலிடம்',
இலங்கை வங்கி ஒழுங்கை,
சாவகச்சேரி.

(40675)

கண்மணி வேலாயுதம்

சிவன் வீதி உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த திருமதி கண்மணி வேலாயுதம் நேற்று காலமானார்.

இவர் சுப்பையா வேலாயுதத்தின் (சின்னராசா) அன்பு மனைவியும், எஸ். வி. மகேந்திரன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), இரவீந்திரன் (சுவிஸ்), பாலச்சந்திரன் (கனடா), ஜெகதீஸ்வரன் (கனடா), குகேந்தினி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜிதா, மதிவதனி (சுவிஸ்), நிமலினி (கனடா), சுஜாதா (கனடா), புண்ணியமூர்த்தி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், லாவண்யா, சுகன்யா, அருண்மாறன், ஆரண்யா, நிரு, இராகுலன், பாரத், அஜந்த், சரண்யா ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-02-96) ஞாயிறு நண்பகல் 12.00 மணிக்கு கேரதிவு, கைதடி — நாவற்குழியில் (மறவன்புலோ) நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். வி. மகேந்திரன்
(மகன்)

தற்போதைய முகவரி:
சு. கந்தையா
கைதடி, நாவற்குழி (மறவன்புலோ),
கைதடி.

(40676)

திருமதி நடராசா செல்லம்மா
(சில்லாலை)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும், தற்போது மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவி செல்லம்மா 17- 2- 96 இல் காலமாகிவிட்டார்.

இவர் மனோரஞ்சிதம் (கிளி), கோபாலகிருஸ்ணராசா (இளைப்பாறிய பாதுகாவல ஊழியர், தெல்லிப்பழை), மகாலட்சுமி (மைனா), லோகேஸ்வரி, காலஞ்சென்ற சறோசாதேவி, ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புத் தயாரும், காலஞ்சென்ற கிருஸ்ணபிள்ளை, ராஜகுமாரி, ஜெயராசா (மாநகரசபை, யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற சிவபாலன், கனகலிங்கம் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆனந்தகுமார் (தபால் கந்தோர், பண்டத்தரிப்பு), விஜயகுமார் (ஜேர்மனி), கிருஸ்ணகுமார், தர்சினி, சுதாகர் (கனடா), கஜேந்தினி, கஜேந்திரன், சுதர்சன், ராகுலன், இந்திராணி, மதிவதனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும், சஜீவன், விதுஷா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18-2-96) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெற்று, மிருசுவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
[illegible] பாலகிருஸ்ணராசா
(மகன்)

தற்போதைய முகவரி:
மட்டத்தடி ஒழுங்கை,
முந்திரிகைத் தோட்டம்,
மிருசுவில்.

ஒகஸ்ட் பரீட்சை எடுக்கும் மாணவருக்கான

ஜி. சீ. ஈ உயர்தர வகுப்புக்கள் அடுத்த மாதம் வன்னியில் ஆரம்பம்

இடம்பெயர்ந்த மாணவருக்கும் வசதிகள்

கிளிநொச்சி பெப். 18 எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெற உள்ள ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான வகுப்புக்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பமாக உள்ளன என கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து, வன்னிப் பெருநிலப்பரப்பில் வந்து தங்கி உள்ள மாணவர்களும் வன்னியிலேயே தமது உயர்தரக் கல்வியைத் தொடரவும், அவர்கள் பரீட்சைக்கு அங்கிருந்தே தோற்றுவதற்கு விண்ணப்பிக்கவும் வசதிகள் செய்யப்பட உள்ளன.

எனவே யாழ். மாவட்த்தில் இருந்து இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்கு வந்துள்ள மாணவர்கள் இம் மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னர் தமது பெயர் விவரங்களைப் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இதே வேளை, கிளிநொச்சி மாவட்டத்தில் தங்கியுள்ள மாணவர்கள் தங்கள் பெயர்களை இதுவரை பதிவு செய்து கொள்ளாதிருப்பின் கரைச்சி கோட்டக் கல்வி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஜி. சீ. ஈ உயர்தர கலை, விஞ்ஞான, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகள் வருமாறு:

1. கலை, வர்த்தக, வகுப்புகள் நடைபெறும் பாடசாலைகள்:

மத்திய கல்லூரி, புனித திரேசா பெண்கள் கல்லூரி, இந்துக்கல்லூரி, வட்டக்கச்சி மகா வித்தியாலயம், முருகானந்தா மகா வித்தியாலயம், பளை மத்திய கல்லூரி.

2. கலை, வர்த்தக வகுப்புக்கள் நடைபெறும் பாடசாலைகள்:

முழங்காவில் மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம், திருவையாறு மகா வித்தியாலயம், கிளிநொச்சி மகா வித்தியாலயம், இராமநாதபுரம் மகா வித்தியாலயம், உருத்திரபுரம் மகா வித்தியாலயம்.

3. கலை வகுப்புக்கள் மட்டுமுள்ள பாடசாலைகள்:

கனகபுரம் மகா வித்தியாலயம், கண்டாவளை மகா வித்தியாலயம் பூநகரி மகா வித்தியாலயம். (இ)

கிளிநொச்சியில் 15 பாடசாலைகள் 2 நேர பாடசாலைகளாக இயங்கும்

குடாநாட்டிலிருந்து இடம் பெயர்ந்து கிளிநொச்சியில் பாடசாலைகளில் தங்கி உள்ள மக்களுக்கு நீண்டகால தற்காலிக வதிவிடங்களை அமைத்துக் கொடுத்து அவர்களை அங்கு குடியமர்த்திவிட்டு மார்ச் முதலாம் திகதி பாடசாலைகளை ஆரம்பிப்பது எனவும்—

இரு நேரப் பாடசாலையாக நடத்த 15 பாடசாலைகளை தெரிவு செய்வது என்றும்—

கிளிநொச்சி செயலகத்தில் நடந்த அத்தியாவசிய சேவைகள் தொடர்பான கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

கிளிநொச்சி அரச அதிபர் திரு. எஸ். தில்லைநடராசா தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் ஏனைய திணைக்கள தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இக் கூட்டத்தில் பல்துறை சார்ந்த விடயங்கள் குறித்து ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு;

★ பாடசாலை உபகரணங்கள், அப்பியாச புத்தகங்கள் என்பனவற்றை பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக ப. நோ. கூ. சங்கங்கள் மூலம் எடுத்து வருதல்.

★ இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியுள்ள சகல உத்தியோகத்தர்களும் முழுக் கடமை நேரத்திலும் பணியாற்றுதல்.

★ இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுககான சம்பளம் அவர்களின் திணைக்களங்களிலேயே வழங்கப்படும்.

★ இடம்பெயர்தோருக்கு நிவாரணம் வழங்கும்போது எந்த மாதத்துக்கான, என்ன என்ன பொருள்கள் வழங்கப்படுறது என்ற விவரங்களை மக்கள் அறியக்கூடிய வகையில் விளம்பரப் பலகையில் ப. நோ. கூ. சங்கங்கள் அறிவிக்க வேண்டும்.

★ தர்மபுரம், முழங்காவில் வைத்திய சாலைகளை த[illegible] முயர்த்தல்.

★ ஆலங்கேணியில்கிழமைக்கு 3 நாள்கள் நடைபெறும் சிகிச்சைகளை தினமும் நடத்தல்.

★ தர்மபுரம் வைத்தியசாலையின் திருத்த வேலைகளை இம் மாதம் 28ஆம் திகதிக்கு முன் பூர்த்தி செய்தல்.

★ வைத்தியசாலைகளில் நடக்கும் நிர்வாக சீரின்மையைக் கண்டறிய பிரதி சுகாதாரப் பணிப்பாளரும், அரச அதிபரும் வைத்தியசாலைகளுக்கு திடீர் விஜயங்களை மேற்கொள்ளல்.

(இ-3-9)

விடுதலையான கிறிஸ்தவ குருமாரை வன்னியில் இந்துக்கள் வரவேற்றனர்

கிளிநொச்சி பெப். 18 தாண்டிக்குளத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விடுதலையான யாழ். மறைமாவட்ட வணபிதா. ஜெபநேசன், வணபிதா. இமானுவல் பயஸ் ஆகியோர் நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வந்து சேர்ந்ததும் கிளிநொச்சி வாழ் சைவ மக்கள் அவர்களுக்கு வரவேற்பு அளித்தனர்.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் நேற்று முன்தினம் மாலைப் பூசையின் போது வண பிதா ஜெபநேசன், வண பிதா. இம்மனுவேல் பயஸ் ஆகியோர் நீண்டகாலம் வாழவேண்டும் என்று கோரி மக்கள் பிரார்த்தனை செய்தனர்.

இவ்விரு மத குருமார்களும் சமூக மேம்பாட்டுக்காக உழைப்பவர்கள் இவர்கள் கிறிஸ்தவ மக்களுக்கு மட்டுமல்ல சைவ மக்களுக்கும் பணியாற்றுபவர்கள் என்று அங்கு மக்கள் தெரிவித்தனர்.

விசேட பிரார்த்தனையை அடுத்து ஆலயக் குருக்கள் அளித்த காளாஞ்சியயை ஏற்றுக்கொண்ட மத குருமார்கள் மக்களுக்கு நன்றி கூறினார்கள்.

கொழும்பில் இருந்து இவ்விரு மத குருமாரும் நிவாரணப்பணிக்காக ஒரு தொகை பணத்தை எடுத்து வந்த சமயம் விடுதலைப் புலிகளுக்கு பணம் எடுத்துச் செல்கிறார்கள் என்ற குற்றச்சாட்டில் படையினர் இவர்களை கைது செய்து தடுத்து வைத்து விசாரணை செய்து அண்மையில் விடுதலை செய்தது தெரிந்ததே. (இ-3)

சகல...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் குரல்'' அறிவித்தது.

கடற்புலிகள் பலத்த தாக்குதல்களை நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக சகல கடற்படைத் தளங்களும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது என்றும் ''புலிகளின் குரல்'' மேலும் தெரிவித்தது.

இதற்கிடையில்—

கடற்படைக்கு ஆள்திரட்டும் நடவடிக்கையை துரிதப்படுத்தவும் ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்திருக்கின்றது

கடற்படையில் இணைவதற்கு விண்ணப்பித்து, 'நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு, மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் அனைவரையும் அவசரமாக இன்று காலை கடற்படைத் தலைமையகத்துக்கு அடையாள அட்டைகள் மற்றும் பொலிஸ் சான்றிதழ்களுடன் [illegible] மாறு ரூபவாஹினி மூலம் [illegible]

ராணுவ...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவ நீதி விசாரணையின் போது கொலைச் சம்பவத்தில் ஈடுபட்ட இராணுவத்தினரை அடையாளம் காட்டினால் பின் விளைவுகளை எதிர்நோக்க நேரிடும் என பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இராணுவ அதிகாரிகளினால் நடத்தப்படும் விசாரணைகளின் நியாயத் தன்மை குறித்து சர்வதேச மன்னிப்புச் சபையும் ஐயம் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3-7)

பூகத்தை...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தில் தனது கணவரை பறிகொடுத்த பூரணம் என்ற பெண் இந்தக் கொடூரச் செயலைப் புரிந்த இராணுவத்தினரைக் கண்டால் தன்னால் அடையாளம் காட்ட[illegible]யும் என்று[illegible] தெரிவித்து[illegible] [illegible] வெறியாட[illegible] படுகொலை[illegible] இராணுவ[illegible] [illegible] (உ-3)

கொழும்பில்

21 தமிழர் கைது

கொழும்பு, பெப். 18 கொழும்பு புறக்கோட்டை பிரதான பஸ் நிலையப் பகுதியில் நேற்று முன்தினம் முற்பகலில் படையினர் மற்றும் பொலீஸார் பெரும் தேடுதல் வேட்டை ஒன்றை நடத்தினர் இத்தேடுதலின் போது 21 தமிழர்கள் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்படுகின்றது. (உ-6)

படசாலைகளில்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற குண்டு வெடிப்பினால் நிதி வட்டாரங்களிலும், முதலீட்டாளர் மத்தியிலும் உண்டான அச்சத்தையும், அவநம்பிக்கையையும் நீக்குவதற்கு முயன்று வரும் ஸ்ரீலங்கா அரசாங்கம் —

பாடசாலைகளை இழுத்து மூடிவிட்டமை அதன் முயற்சிக்கு பேரடியாகும்.

ஸ்ரீலங்கா என்றாலே மேற்கு நாட்டவர்களிடையே ஒருவித அச்சம் ஏற்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய, மேற்கிந்திய நாடுகளின் கிரிக்கெட் கோஷ்டிகள் பாதுகாப்பில்லை என்று தெரிவித்து கொழும்புக்கு வர மறுத்துவிட்டமை மேற்குலக நாடுகளின் அச்சத்தை நியாயப்படுத்துவ[illegible] கொழும்பில் உள்ள மேற்கு [illegible] ராஜதந்திரிகள் [illegible] கருத்து [illegible]ார். — இவ்வாறு ஏ. எவ். பியின் விமர்சனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-7-3)

இராமியக் கலைகளின் 3 நாள் எழுச்சிப் பாசறை

கரணவாயில் இன்று ஆரம்பம்

வடமராட்சி, பெப். 18 சிங்களப் பேரினவாத அரசின் இராணுவ அட்டூழியங்களை மக்களுக்கு கலை வடிவத்தில் எடுத்தியம்புமுகமாக —

கரணவாய் மகாவித்தியாலய மைதானத்தில் இன்று ஞாயிறு முதல் செவ்வாய்க் கிழமை வரை மூன்று நாள் கிராமிய கலை எழுச்சிப் பாசறை ஒன்று நடைபெறவுள்ளது.

இப்பகுதியிலுள்ள பொது நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்நிகழ்வில் பகல் வேளைகளில் கிராமங்கள் தோறும் தமிழீழத் திரைப்படங்களும் வீதி நாடகங்களும் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சிகள் கரணவாய் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் கலை நிகழ்வுகளாக இடம் பெறும்.

இன்றைய கலை நிகழ்வுகளில் சிறப்பு அம்சமாக கருணை ரவியின் 'சிறை' நாடகமும், நாளை திங்கட்கிழமை பொன்கணேசமூர்த்தியின் 'தாகத்தின் மேகம்' என்ற நாடகமும் இறுதி நாளான நாளை மறுதினம் (செவ்வாய்) போராளிக்கலைஞர்களும், தமிழீழக் கலைஞர்களும் இணைந்து வழங்கும் 'போர்க்கால ராகங்கள்' என்னும் இசை நிகழ்வும் இடம்பெறும். (அ-173)

கிளிநொச்சியில்

7 பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள்

விண்ணப்பம் கோரப்பட்டுளது

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள ஏழு பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்களை நியமிக்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பளை மத்தியகல்லூரி, உமையாள்புரம் அ. த. க. பாடசாலை, ஆனையிறவு சி. த. க பாடசாலை, பொன்னாவெளி சைவப்பிரகாச வித்தியாலயம், மட்டுவில்நாடு அ. த. க. பாடசாலை, சுண்ணாவில் அ. த. க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர்களை நியமிக்க கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் விண்ணப்பங்களை கோரியுள்ளார்.

இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறும் அவர் கேட்டுள்ளார்.

பளை மத்திய கல்லூரிக்கு அதிபர் தரம் ஒன்றைச் சேர்ந்தோரும், ஏனைய பாடசாலைகளுக்கு பயிற்றப்பட்ட அல்லது பட்டதாரி ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம் என்றும்—

கிளிநொச்சி மாவட்டத்தில் அவர்கள் நிரந்தரமாக பணியாற்றுவோராக இருக்க வேண்டும் என்றும்—கேட்கப்பட்டுள்ளது. (இ-3)

பழைய பாணியில் அரசு விசாரணைக்குழு அமைப்பு

ந. ச. ச. கட்சி கூறுகின்றது

முன்னைய படுகொலைகள் போல குமரபுரம் படுகொலைக்கும் ஸ்ரீலங்கா அரசு விசாரணைக்குழு அமைத்துள்ளது என நவசமாஜக் கட்சி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நவாலி தேவாலயப் படுகொலை தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு தனது அறிக்கையை இதுவரை சமர்ப்பித்ததா? பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதா? — என்ற கேள்விகளுக்கு மத்தியில் குமரபுரம் படுகொலைக்கும் விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது என அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது. (உ-3)

விசர்நாய் கடிக்காளாவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

மந்திகை, பெப் 18 வடமராட்சி மற்றும் கிளிநொச்சிப் பகுதிகளில் விசர்நாய்களின் தொல்லை அதிகரித்து வருகிறது. இந்த இரண்டு பிரதேசங்களிலிருந்தும் நேற்று மட்டும் விசர்நாய்க்கடிக்குள்ளான 13 பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

இவர்களில் எட்டுப் பேர் வடமராட்சியின் பருத்தித்துறை, புலோலி, துன்னாலைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள். இவர்கள் நேற்று விசர்நாய்க் கடிக்காளானார்கள்.

கிளிநொச்சி மற்றும் அக்கராயன் பகுதிகளிலிருந்து வந்த ஐவரும் கடந்த வியாழக்கிழமை விசர்நாய்க் கடிக்கு ஆளானார்கள்.

இதே வேளை கடந்த 45 நாள்களில் மொத்தம் 116 பேர் மந்திகை ஆஸ்பத்திரியில் விசர்நாய்க் கடிக்குச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

வடமராட்சி, தென்மராட்சி, கிளிநொச்சிப் பகுதிகளில் விசர்நாய்க்கடிக்குள்ளாவோர் எண்ணிக்கை அதிகரித்து வருவதையே இந்த விவரம் பிரதிபலிப்பதாக வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-15-173)

ஷெல் தாக்குதல்

வடமராட்சி, பெப். 18 பலாலி இராணுவ முகாமிலிருந்து நேற்றுக் காலை 7.30 மணி முதல் தொண்டமானாறு, கெருடாவில் பகுதிகளை நோக்கி விட்டு விட்டு ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. (உ-135-173)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மருத்துவ பீடச் சபை

மருத்துவ பீடத்தின் மருத்துவ பீடச் சபை 20-02-1996 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறும். ஆசிரியர்களும், அங்கத்தவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

பீடாதிபதி,
மருத்துவம்

17-2-96

(சி-2974)

2 ஆம் பக்கத்தி[illegible] மரண அறிவித்தல்கள்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, அரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 18-02-96 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org